<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி – ஊரக வளர்ச்சி துறையில் சார்நிலைப் பணியில் வட்டார வளர்ச்சி அலுவலர்களைப் பணிமாற்று முறை மூலம் மாநில தொகுப்பு பணியாளர் பிரிவில் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் தற்காலிகமாகப் பணி நியமனம் (Appointment by Recruitment by Transfer) செய்ய 2009–10ஆம் ஆண்டிற்கான தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல்(temporary list) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதிகள் 4(a)–இன் கீழ் ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை

அரசாணை (4டி) எண்.6 நாள் 29.10.2009

<u>படிக்க</u>:

1. அரசாணை (டி) எண்.480, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி(இ1) துறை, நாள் 5.8.08.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடித எண்.14900/09/ ஜிஇ2.1, நாள் 5.8.09, 10.10.09 மற்றும் 23.10.09.

–––––––

<u>ஆணை</u>:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ஆம் ஆண்டிற்கு பணிமாற்று முறை மூலமான நியமனத்திற்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை பதவியில் ஏற்படப்போகும் காலியிடங்கள் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலைப் பதவியில் காலியிடங்கள் நிரப்பவேண்டி தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரிக்க, பணி மூப்பின் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் பெயர் பட்டியலை உரிய படிவத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்ததில் இதற்கு முந்தைய ஆண்டுகளுக்கு வெளியிடப்பட்ட பட்டியல்கள் சில தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலாக (temporary list) வெளியிடப்பட்டுள்ளதால், 2009–10ஆம் ஆண்டுக்குரிய பட்டியலையும் முறையான தோர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்குப் பதிலாக, தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலாக (Temporary List) வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி ஊரக வளர்ச்சி உதவி இயக்குநராக ஊரக வளர்ச்சிப் பணியில், பணிமாற்று முறை மூலம், நியமனம் செய்ய 2009–10ஆம் ஆண்டிற்கான 72 தகுதியுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கு கீழ்கண்ட வரிசைப்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொது விதி 4(a)-ன் கீழ் அரசு ஒப்புதல் வழங்குகிறது.

| வ.எண் | பணி மூப்பு எண் | பெயர் (திருவாளர்கள்) |
|---|---|---|
| 1 | 2687 | எஸ்.கண்ணன் |
| 2. | 3051 | பி.இளங்கோவன் |
| 3. | 3109 | கே.அன்பழகன் |
| 4. | 3149 | எஸ்.சூரியகலா |
| 5. | 3153 | டி.பன்னீர்செல்வம் |
| 6. | 3292 | என்.தருமு |
| 7. | 3323 | ஆர்.குலசேகரன் |
| 8. | 3326 | எஸ்.பாஸ்கரன் |
| 9. | 3327 | சி.வீரய்யா |
| 10 | 3336 | பி.மோகன்ராஜ் |
| 11 | 3337 | கே.கோவிந்தராஜ் |
| 12. | 3348 | எஸ்.வேலாயுதம் |
| 13. | 3351 | எஸ்.சரோஜா தேவி |
| 14. | 3358 | ஜே.ஈகின் நவிஸ் |
| 15. | 3361 | கே.எ.சுப்பிரமோனியம் |
| 16. | 3362 | ஆர்.ராஜா ஜெய பாலா |
| 17. | 3369 | வி.மாணிக்கம் |
| 18. | 3370 | பி.ராசுமணி |
| 19. | 3373 | ஜி.பானுமதி |
| 20. | 3375 | கே.எஸ்.ராதாகிருஷ்ணன் |
| 21. | 3376 | டி.பழனிகுமார் |
| 22. | 3377 | ஆர்.பத்மினி |
| 23. | 3382 | வி.சந்திரசேகரன் |
| 24 | 3389 | வி.ஜெயபாலன் |
| 25. | 3390 | எம்.ஜானகி |
| 26. | 3392 | பி.ஜே.ரேவதி |
| 27. | 3398 | பி.தமிழரசு |
| 28. | 3403 | எ.ராஜகோபாலன் |
| 29. | 3426 | வி.எஸ்.ராஜேந்திர பிரசாத் |
| 30. | 3428 | ஆர்.வேலுசாமி |
| 31. | 3431 | ஜி.புருஷோத்தமன் |
| 32. | 3436 | எ.கமலம் |
| 33. | 3437 | டி.முனியப்பன் |
| 34. | 3439 | ஆர்.லோகநாதன் |
| 35. | 3442 | ஜி.வேணுகோபால் |
| 36. | 3443 | எஸ்.அண்ணாதுரை |
| 37. | 3446 | எ.ஜோசப் சௌந்தரராஜன் |
| 38. | 3451 | என்.ரவீந்தரன் |
| 39. | 3453 | ஜி.பாலகுருசாமி |
| 40. | 3454 | எஸ்.அருணகிரி |

| | | |
|---|---|---|
| 41. | 3457 | கே.சீனிவாசன் |
| 42. | 3463 | சி.மாறன் |
| 43. | 3465 | ஜி.ஏழுமலை |
| 44. | 3466 | எம்.வசந்தா |
| 45. | 3468 | எ.தியாகராஜன் |
| 46. | 3470 | பி.ஜெயபிரகாஷ் |
| 47. | 3472 | எ.தமிழ்செல்வி |
| 48. | 3477 | எஸ்.சுவர்ணப்பன் |
| 49. | 3478 | எ.இளங்கோவன் |
| 50. | 3486 | எ.செண்பகமுனியாண்டி |
| 51. | 3494 | எம்.சேகரன் |
| 52. | 3499 | பி.ஆறுமுகம் |
| 53. | 3502 | எ.லாசர் |
| 54. | 3504 | எஸ்.பிரேம்குமார் |
| 55. | 3507 | கே.துளசி சிங் |
| 56 | 3508 | டி.ராமச்சந்திரன் |
| 57. | 3509 | எம்.விஜயகுமாரி |
| 58. | 3512 | ஆர்.ராமச்சந்திரன் |
| 59. | 3513 | டி.எஸ்.நாகராஜன் |
| 60. | 3514 | பி.வீரவீரன் |
| 61. | 3519 | எஸ்.ஏசு சகாயம் |
| 62. | 3520 | வி.கலைசெல்வன் |
| 63. | 3522 | டி.கெட்ஸி லீமா அமலினி |
| 64 | 3523 | பி.விஜயலட்சுமி |
| 65. | 3525 | எஸ்.லட்சுமணன் |
| 66. | 3533 | எம்.சர்புதீன் |
| 67. | 3534 | எஸ்.ஜி.ராம் மனோகர் லோகியா |
| 68. | 3536 | பி.கலைச்செல்வி |
| 69. | 3539 | சி.சோமசுந்தரம் |
| 70. | 3544 | எஸ்.கற்பகம் |
| 71. | 3546 | ஆர்.செல்வபெருமாள் |
| 72. | 3647 | ஆர்.ரோகினி |

மேற்காணும் பட்டியலில் வரிசை எண்.7, 21, 28, 37, 39, 40, 42, 43, 45, 46, 47, 48, 50, 53, 55, 58, 62, 63, 67, 71 மற்றும் 72ல் உள்ளவர்கள் ஏற்கனவே வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைப் பணியிடங்களில் இரண்டு ஆண்டுகாலத்திற்குமேல் பணிபுரிந்து வந்தாலும், ஊரக வளர்ச்சி பணி சிறப்பு விதிகளில், விதி 3க்கு அரசாணை(நிலை) எண்.94, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 6.6.08ல் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி ஓராண்டு காலத்திற்கு குறையாமல் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) மற்றும் ஓராண்டு காலத்திற்கு குறையாமல் வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி)ஆகப் பணியாற்ற வேண்டும் என்பதில் முழுமையாகப் பணித் தகுதி பெற்றிருக்கவில்லையாதலால், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் அவர்கள் பெயரைச் சேர்க்க ஏதுவாக அவர்கள் சார்பாக 1987ம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி இரண்டில் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 48ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி சிறப்பு விதிகளில் பத்தி 3ஐ தளர்த்தி தமிழக ஆளுநர் அவர்கள் ஆணையிடுகிறார்கள்.

3. மேற்குறிப்பிட்ட 2009–10ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை அலுவலர் பதவிக்கான தகுதி வாய்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் உரிய விதிகளின்படி துறை பதவி உயர்வுக் குழுவின் (Departmental Promotion Committee) பரிசீலனைக்கு வைத்து ஒப்புதல் பெற்ற பின்னர் முறையான பெயர்ப் பட்டியல் (Regular Panel ) வெளியிடப்படும்.

4. முறையான பட்டியல் வரும்வரை இப்பட்டியலில் உள்ளோர்கள் வரிசைப்படி முற்றிலும் தற்காலிக அடிப்படையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின் விதி 10(a)(1)–ன்கீழ் பணி நியமனம் செய்யப்படுவர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் ஆணையர் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநருக்கான அனைத்து தற்காலிகப் பட்டியல்களையும் தேர்வாணையத்துடன் கலந்து முறையான பட்டியல் தயார் செய்ய உரிய நடவடிக்கை எடுத்து, தக்க செயற்குறிப்பினை அரசுக்கு உடனடியாக அனுப்ப வேண்டுமெனவும், தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றுள்ள நபர்களுக்கு எதிராக தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு (ம) மேல்முறையீடு) விதிகளின் விதி 17(பி)ன்கீழ்/குற்றவியல்/விழிப்புப்பணி/ஒழுங்கு நடவடிக்கை ஆணையரால் ஏற்படுத்தப்பட்ட எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லையெனவும்/தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும், அவர்களுக்கு எதிரான குறைக்குறிப்புரைகள் (adverse remarks) ஏதுமில்லை என்பதையும், தற்காலி பணிநீக்கம் செய்யப்படவில்லை என்பதையும் உறுதி செய்த பின்னர் பதவி உயர்வு அளிக்க செயற்குறிப்புகள் அனுப்பவேண்டுமெனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணையில் கண்ட தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகள் பொதுவிதி 4(a)இல் குறிப்பிட்டவாறு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அனுப்பிவைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
**வழி** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(சென்னை நீங்கலாக)/
சம்பந்தப்பட்ட மாவட்ட கரூவூல அலுவலர்கள்
நகல்
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை –9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், ஊ.வ.(ம)ஊ.துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்